20th March 1954]

SRI M. KALYANASUNDRAM :—" நாங்கள் இப்பொழுது இந்த சட்டசபையின் முன்பாக சொல்லிய விஷயங்களையே ஒரு **Representation** ஆக வைத்துக்கொண்டு மந்திரி அவர்கள் விசாரணை நடத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" It should be put in writing. Otherwise, I may not be prepared to answer it."

SRI S. RAMALINGAM :—" ஏற்கனவே இது சம்பந்தமாக சர்க்காருக்கு புகார் அனுபபப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பப்பட்ட புகாரின் நகல் என்னிடம் இருக்கிறது. அந்தப் புகாரின் பேரில் சர்க்கார் சரியான விசாரணை நடத்துவாாகள் என்று எதிர் பார்த்தோம். ஆனால் சர்க்கார் அப்படிச் செய்யவில்லை. அதன் பேரில்தான் இந்தக் கேள்வியை சர்க்காருக்கு அனுப்பினோம். எழுத்து மூலமாக எந்தப் புகாரைக் கொடுத்தாலும் அதைப்பற்றி விசாரிப்பதாக கனம் மந்திரி அவர்கள் பல தடவைகளில் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அது மாதிரி இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் புகாரை நாங்கள் எழுத்து மூலமாக சர்க்காரிடத்தில் கொடுத்து பல நாட்களாகின்றன. வேண்டுமானாலும் அதன் நகலை இப்பொழுது நாங்கள் சர்க்காரிடம் கொடுக்கிறோம். அதன்மேலாவது ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ? "

Inclusion of handloom goods in the list of articles exported.

* 283 *Q.*—**SRI N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Industries and Labour be pleased to state whether the Government have received any direction from the Central Government to include handloom goods in the list of items that could be freely exported?

THE HON. DR. U. KRISHNA RAO :—" Handloom cloth is already included in the list of items that may be freely exported. I may add that this power of including items is entirely with the Central Government and no directions need be given to the State Governments."

SRI N. K. PALANISAMI :—" சமீபத்தில் ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் டெக்ஸ்டைல்களுடன் கைத்தறி துணிகளும் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் கைத்தறி அதில் எந்த அளவிற்கு சேர்க்கப்பட்டிருக்கிறது ? அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் ஏதாவது யோசனை அனுப்பி இருக்கிறதா ? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" Sir, the matter the hon. Member refers to comes within the purview of the Central Government and the State Government need not be asked and are usually not asked in matters of this kind."

SRI S. DEIVASIGAMANY :—" May I know what the quota is that is allowed for export from the Madras State and if there is also any duty levied upon exported goods? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" As I mentioned in my answer, handloom cloth can be freely exported. There is no quota. As to excise duty, a separate question may be asked as this is a matter which refers to the Central Government and not to the State Government."